# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 28 | மார்ச் 21, 1964 | பக்கங்கள் 10 | விலை சதம் 10


# ஐக்கியம் கண்டோம் ஓரணி திரள்வோம்!

## ஒரே மத்யஸ்தானம் காண்போம்

## கோரிக்கைகள் தருவீர்! இன்றேல் போராட்டம் காண்பீர்!

**எமது தொழிற்சங்க இயக்கத்தின் சரித்திரத்தில் மார்ச் 21-ம் திகதி சனிக்கிழமை சரித்திரப் பிரசித்தி பெறும் முக்கிய நாளாகும். முதல் முறையாக எமது நாட்டுத் தொழிற் சங்க இயக்கம் கூட்டுத் தொழிற் சங்கக் கமிட்டி உருவாக்கிய 21 பொதுக் கோரிக்கைகளின் பின்னல் அதன் ஐக்கிய பலத்தைக் காட்டும்.**

இலங்கைத் தொழிற் சங்க இயக்கம் இதுவரை நடாத்திய ஊர்வலங்கள் அனைத்திலும் பார்க்கப் பிரம்மாண்டமானதாகத் திகழவிருக்கும் ஊர்வலத்தில் அரசாங்க ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகிய அனைவரும் பங்கு பற்றுவர்.

தொழிற் சங்க இயக்கத்தில் இத்தகைய ஐக்கியம் ஏற்பட்டது இது தான் முதல் தடவை. இது பெருமைப்படத் தக்க வெற்றி! இப் பெருமையில் பெரும் பகுதி இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தையே (சி. டி. யூ. எப்) சாரும். முக்கிய தொழிற்சங்க மத்தியஸ்தானங்களின் பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, பொதுவான கோரிக்கைகளின் பின்னல் ஐக்கிய நடவடிக்கையிலீடுபடல் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது இலங்கை தொழிற் சங்க சம்மேளனமே.

சம்பள உயர்வு நிறுத்தம், வேலை நிறுத்தங்களை உடைப்பதற்கு போலிஸ் இராணுவத்தை அரசாங்கம் பாவிப்பது, கருங்காலித்தனத்திற்கு அரசாங்கம் உத்தியோக பூர்வமாக ஊக்கமளிப்பது ஆகிய அரசாங்கத்தின் தொழிலாள வர்க்க விரோதக் கொள்கையை தனிப்பட்டு நின்று போராடி வெல்ல முடியாது என்பதைத் தொழிற் சங்க மத்தியஸ்தானங்கள் உணர்ந்ததன் விளைவாக எழுந்ததே இன்றைய ஐக்கியம். துறைமுக வேலைநிறுத்தம், வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம், இ. போ. ச. ஊழியர்களின் சரித்திரப் பிரசித்திபெற்ற 17 நாள் வேலை நிறுத்தம் ஆகியவற்றின் அனுபவம் இதனை முழுத் தொழிற்சங்க இயக்கத்துக்கும் நிரூபித்தது.

இவ் வனுபவரீதியான உணர்வே சிலிங்கோ மாளிகையில் 1963 செப்டம்பர் 29-ம்திகதி நடைபெற்றபிரதானதொழிற் சங்க மத்தியஸ்தானங்கள் அனைத்தினதும் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாநாட்டுக்கும் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி உருவாகுதற்கும், முழுத் தொழிற் சங்க இயக்கத்தினதும் சார்பாக 21 பொதுக் கோரிக்கைகள் உருவாகுதற்கும் வழிகோலியது. இக் கோரிக்கைகளில் முக்கியமானது நாட்சம்பள ஊழியர்களுக்கு நாளுக்கு ரூ 1/-ம் மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு மாதத்திற்கு ரூ 30/- உயர்வும் வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

21 கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான கிளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ந்தோங்குகின்றது. மார்ச் 21-ல் உச்சகட்டத்தை அடையும். கோரிக்கைகளை முன்வைத்ததும் அரசாங்கமோ அன்றி முதலாளிகளோ இவற்றினை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை தொழிலாளர்கள் உணருதல் வேண்டும். ஐக்கியமான, உக்கிரமான போராட்டம் மூலமே இக் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். இதன் மூலம் முழுத் தொழிற்சங்க இயக்கத்தினதும் ஐக்கியம் இன்னும் உயர்ந்ததோர் கட்டத்தை எட்டிப் பிடிக்கும். இத்தகைய போராட்டத்தின் பொழுதே பழைய வித்தியாசங்கள் மறைந்து புதிய தோழமைத் தொடர்புகள் உருவாகும். தொழிற் சங்க இயக்கத்தின் கூடுதல் ஐக்கியத்தை உருவாக்குவதற்கு இப் பொதுப் போராட்டம் உதவுதல் வேண்டும். இதனல் தான் தொழிற் சங்க மத்தியஸ்தானம் அமைத்தல் வேண்டும் என்ற இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் குரலை வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும் நேர்மையான தொழிற் சங்க வாதிகளும் ஆதரவளிப்பர்.

சீர்குலைவாளர்கள், திரிபுவாதிகளின் நடவடிக்கைகளுக்கு இப்பொழுது இடமில்லை- அவர்களின் நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவை. அவர்கள் சீர்குலைக்க முயற்சியெடுக்கும் ஸ்தாபனங்களின் தலைவர்களுடன் ஒரே மேடையில், தோன்றுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ள அதே வேளையில் இத்தகைய நடவடிக்கைளில் அவர்கள் ஈடுபடுவது அர்த்தமற்றது. ஐக்கியத்தின் பாதுகாவலர்கள் யார், சீர்குலைவாளர்கள் யார் என்பதைத் தொழிலாளர்கள் இப்பொழுது கணிக்க முடியும்.

மார்ச் 21ம் திகதி ஊர்வலமும் மாபெரும் கூட்டமும் தொழிற் சங்க இயக்கத்தை மேலும் ஒரு படி முன்னெடுத்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. தமது தொழிற் சங்கக் கொடியின் கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் ஒன்றுதிரளுதல் வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கமும் முதலாளி மார்களும் அளிக்கத் தவறினல் ஈழத்து வரலாறு காணுத பிரமாண்ட வேலை நிறுத்தம் நிச்சயம் ஏற்படும் என்பதைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

தலையங்கம்

# ஐக்கிய சக்தி!

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் (சி. டி. யூ. எப்.) முன் முயற்சியினல் உருவான ஈழத்திலுள்ள பிரதான தொழிற் சங்கங்களின் ஐக்கியம், நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

சமீப காலமாக ஆட்சியினர் எடுத்து வரும் தொழிற் சங்க விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை இந்த ஐக்கியம் ஓரளவு மட்டம் தட்டியுள்ளது.

இ. போ. ச, வெள்ளவத்தை ஆலை வேலை நிறுத்தங்களின் போது ஆட்சியினர் எடுத்த கடுமையான நடவடிக்கைகளும், கைக்கொண்ட பிடிவாதக் கொள்கையும் ஆட்சியாளரின் தொழிலாள விரோதப் போக்கை சந்திக்குக் கொண்டு வந்தன. திரிபுவாதக் கூட்டம், ஆட்சியாளரின் இக் கொள்கைக்கு பின்னணி ஆதரவு தந்து 'சூ' மூட்டினர்கள்.

அண்மையில் நடைபெற்ற துறைமுக வேலை நிறுத்தத்தின் போது, இதே தொழிலாளர் விரோதக் கொள்கையை வலியுறுத்த ஆட்சியினர் முற்பட்டனர். மந்திரி மஹானும சமரவீர 'ஆட்சி கவிழ்ந்தாலும், கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று வீராப்புப் பேசினர்.

ஆனல், தொழிற் சங்கங்களின் உறுதியான ஐக்கியமும், திடமான ஒற்றுமையும் ஆட்சியாளரைப் பணிய வைத்தது.

நாட்டின் பொருளாதார நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. வாழ்க்கைப் புள்ளி வேறு எந்த காலத்திலும் இல்லாத அளவுக்கு மேலே போய்க்கொண்டிருக்கிறது.

இவைகளின் தாக்கம் அனைத்தும் சாதாரண பாமர மக்களின் மீதும், தொழிலாளர்கள் மீதுமே சுமத்தப்படுகின்றன. உழைப்பாள மக்களின் கஷ்டமான வாழ்க்கைச் சுமை நாளுக்கு நாள் கூடிவருகிறது.

ஒரு புறம் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. மறுபுறம் ஆட்சியாளரின் சம்பளக் கட்டுப்பாட்டுக் கொள்கை தொழிலாளர்களின் மென்னியை நெருக்கிறது.

இந்த நிலையில் மாற்றம் உருவாக்க, சி.டி. யூ. எப். பும், மற்றைய தொழிற் சங்கங்களும் நீண்டநெடுங் காலமாகப் போராடி வந்துள்ளன.

இப் போராட்டத்தின் தொடர்ச்சியே 21 கோரிக்கைகளுக்கான பேரியக்கம்.

மிகச் சாதாரண, நியாயமான இக் கோரிக்கைகளை வென்றெடுக்க சகல தொழிற் சங்கங்களும் இன்று ஓரணி திரண்டு தமது சக்தியை இன்று பலம் பொருந்தியதாக்கி வருகிறது.

21 கோரிக்கைகளுக்கான போராட்டம் இவ் வேளையில் அதிக அவசியமாகியுள்ளது.

பாராளுமன்றம் ஒத்திப் போடப்பட்டுள்ளதும், பத்திரிகைகள் வெளியிடும் ஹேஸ்யங்களும் 'பாராளுமன்ற வாதிகளின்' பாதை பயன் தராது என்பதை மெய்ப்படுத்தியுள்ளன.

தொழிலாளர்களின் ஐக்கிய சக்தியினல் மட்டுமே ஆட்சியாளரின் எத்தகைய அடக்குமுறைகளையும், கடுமையான நடவடிக்கைகளையும் எதிர்க்க முடியும்.

எனவே, நியாயமான 21 கோரிக்கைகளுக்கான போராட்ட இயக்கத்தில் லட்சோப லட்சமாக அணிதிரள சகல தொழிலாளர்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

ஐக்கியமே வெற்றி தரும். அதுவே தொழிலாள வர்க்சுத்தின் சக்திமிக்க ஆயுதம்.

## சி.டி.யூ.எப். ஊர்வலம்: கும்பனி தெரு டிமெல் பார்க்கிலிருந்து 2-30-க்கு ஆரம்பம்

(1) இள ஊர்வலம்: வெள்ளவத்தை நெசவாலை எதிராக பி.ப 12-30 மணிக்கு டிமெல் பார்க்கை நோக்கிப் புறப்படும். (2) கிருண்ட்பாஸ் சிலோன் டிரேடிங் கம்பெனி எதிராக பகல் 12-30-க்கு ஆரம்பமாகும்.

### விவேகானந்த வித்தியாலயம்

# அறிவு புகட்டும் பள்ளி அயோக்கியர்களின் பாசறையாகியுள்ளது

## சதிகார கூட்டத்திற்கு பீட்டர் கெனமன் தலைமை

> கொழும்பு மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்த வித்தியாலயம், பழம் பெருமை வாய்ந்தது. கடந்த பல காலமாக கல்விச் சிறப்புக்கும், பண்பு வளர்ச்சிக்கும் பெயர் பெற்ற ஸ்தலமாகவிருந்த இப் பள்ளி, சில அயோக்கியர்களின் அட்டகாசத்திற்கு இலக்காகி உருக்குலைந்து வருகிறது. உண்மை நிலையை உள்ளது உள்ளபடியே இக் கட்டுரை ஆசிரியர் இங்கு விவரித்துள்ளார்.

பாராளுமன்ற பஜனைக் கோஷ்டியினரான திரிபுவாதக் கெனமன் கும்பல், தொழிற்சங்க ஐக்கியத்தைப் பிளவுபடுத்த யூ. என். பி. குண்டர்களுடன் கூட்டுச் சேர்ந்து, துரோகம் செய்து வருவது பிரசித்தமாகி விட்டது. மக்களின் நியாயமான கோரிக்கைகளை நசுக்குவதற்கு எந்தப் பிற்போக்குக் கும்பலுடனும் கை கோர்த்து, எப்படிப்பட்ட காடைத் தனமும் செய்யத் தயங்காது என்பதைக் கடந்த வாரம் நடைபெற்ற கொழும்பு விவேகாநந்த மகா வித்தியாலயப் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டம் நிரூபித்தது.

இவ் வித்தியாலயத்தில் மலிந்துள்ள ஊழல்கள் கல்வி வளர்ச்சியை ஸ்தம்பிக்கச் செய்யுமளவுக்கு அதிகரித்துள்ளன. அதிபர் ஏழை மாணவரிடம் கண்டிப்பாக வசூல் செய்யும் வசதிக் கட்டணப் பணத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும், ஆசிரியர்-மாணவர்களிடையே குழப்ப நிலையை உண்டாக்குவதாகவும், ஊழல்களைக் கண்டிக்கும் ஆசிரியர்களையும். மாணவர்களையும் பழிவாங்குவதாகவும், பெற்றோர்களைப் பயமுறுத்திக் கையெழுத்துக்கள் சேர்ப்பதாகவும் கடந்த ஓராண்டுக்கும் மேலாகப் பத்திரிகைகள் கடுமையாகத் தாக்கி எழுதி வருகின்றன; பெற்றோரும் ஆசிரியரும் கிளர்ச்சி செய்து வருகின்றனர். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டும்படி பலர் வற்புறுத்தியும் 1952-ம் ஆண்டுக்குப் பின் கூட்டப்படாமலே தள்ளிப் போடப்பட்டு வந்துள்ளது.

பெற்றோரின் கிளர்ச்சி காரணமாக, கல்வி இலாகா இந்த அதிபருக்கு இரண்டு தடவை இடமாற்ற உத்தரவு பிறப்பித்தது. அதிபர், திரிபுவாதிகளின் அப்பன், பீட்டர் கெனமனின் காலில் விழ, அப்பன் அபயம் கொடுத்து மாற்றத்தை ரத்துச் செய்ததுடன், ஏழைப் பெற்றோரின் கிளர்ச்சியை முறிப்பதற்காகக் குட்டித் திரிபுவாதிகள் சிலரையும் தந்துதவினார். (இந்தக் கெனமன்தான் ஓராண்டுக்குமுன்னர், இதே அதிபரின் தான்தோன்றிப் போக்கைக் குறித்து கல்வி மந்திரியிடம் முறையீடு செய்தவர்.)

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டும்படி பெற்றோர் செய்துவந்த கிளர்ச்சி உக்கிரமடைந்தது. பெ. ஆ. சங்கத்தைக் கூட்டும்படி கல்வி இலாகா கட்டளையிட்டது. அதிபரின் பழிவாங்கும் நடவடிக்கையினால் முன்பு பெ. ஆ. சங்கக் காரியதரிசியாக இருந்த ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டு காலியான மேற்படி பதவிக்கு இந்திய வம்சா வழியினரான ஒருவரைத் தெரிவு செய்து, தங்கள் துரோக வேலையை ஆரம்பித்தனர்,

திரிபுவாதிகள் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிளவுபடுத்தச் செய்து வரும் 'தமிழன்' வகுப்புவாத அயோக்கியத்தனம் இப் பெற்றோர் போராட்டத்திலும் பயன்படுத்தப்பட்டது. படு கீழ்த்தரமான முறையில் பிரசாரங்கள் கட்டவிழ்த்து விட்ப்பட்டன. அலைபோலக் கிளர்ந்தெழுந்த எதிர்ப்புகளை முறியடிக்க 'இந்தியன்' ஐக்கியம் கட்டவிழ்க்கப்பட்டது. வித்தியாலயத்தில் படிக்கும் மாணவர்களில் பெருவாரியானோர், இந்திய வம்சா வழியினராகையால் இந்தமுறை கையாளப்பட்டது. பல மட்டங்களில் பலவித 'கோயபல்ஸ்' முறைகளெல்லாம் கையாளப்பட்டன. சில இடங்களில் அதிபரையே ''நம்மவாள் தான்'' என்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. ''ஒன்றாகப் படித்த ஆண்-பெண் மாணவர்களைப் பிரித்துத் தனித்தனி வகுப்புகள் நடத்துவதனால் மாணவர் 'சண்டித்தனம்' செய்கிறார்கள்'' என்று பச்சைப் பொய்யை அவிழ்த்து விட்டார்கள். மாற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர், தனது பழைய சோடிகளை (எத்தனை பேர் தவிக்கின்றார்களோ!) விட்டுப் பிரிய மனமில்லாததினால் 'புரட்சி' செய்கிறார் என்று சாக்கடையில் தோய்த்தெழுதும் ஒரு கைக் கூலிப் பத்திரிகை (யூ. என். பி. கொடுக்கும் பணத்திலிருந்து நடத்தப்படுவது) யில் எழுதப்பட்டது.

## மாணவர்களின் கிளர்ச்சி வலுக்கிறது

பெ. ஆ. ச. கூட்டுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே ஒரு பாராளுமன்றத் தேர்தலுக்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. பாடசாலையில் படிப்பித்தலே அற்றுப் போய்விட்டது. 'சண்டித்தனம்' செய்யும் மாணவர்களைச் சமாளிப்பதில் ஆசிரியர்கள் நேரத்தை விரயம் செய்தனர். கல்விக்கூடம் சதிகாரர் கூடமாக மாறியது. திரிபுவாதிகள், இந்திய முதலாளிகள், கத்தோலிக்கப் பிற்போக்குவாதிகள், சமட்டிக் குஞ்சுகள் ஆகியோருடன், சில ஆசிரியப் பந்தங்கள் முதலிய சதிகாரர்கள் ஒன்றுசேர்ந்து இரவு பகலாகச் சதித் திட்டம் தீட்டினர். ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கையுயர்த்த ஆட்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!'' என்று ஆசிரியர்கள் விரட்டப்பட்டனர். இரவு பகலாக அதிபர் தம் சுற்றம் பரிவாரம் சூழ வீடுவீடாகக் காரில் ஏறிச்சென்று பெற்றோரிடம் தனது பதவியைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டார்.

கேவலம், பெற்றோர்-ஆசிரியர்களது ஒரு சாதாரண கூட்டம் நடத்துவதற்கு ஒரு தேர்தலில் வாக்களிக்கும் முறையே கடைப்பிடிக்கப்பட்டது. பாடசாலை மண்டபம் கோட்டையாக மாற்றப்பட்டு பொலிஸ் காவல் போடப்பட்டது. அங்கத்துவச் சீட்டுகள் பெற்ற பெற்றோரே கூட்டத்தில் பங்குபற்ற முடியும் என்ற கண்டிப்பான முறையைக் கண்துடைப்புச் செய்து 'உள்ளே காடையர்களையும், குத்துச் சண்டைப் பயிற்சிக்கழக அங்கத்தவர்களையும், அருகிலுள்ள கத்தோலிக்க பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்களையும் நிரப்பி வைத்திருந்தனர். அதிபரின் அண்ணன், தம்பி, மாமன், மச்சான்மாரும், இந்திய முதலாளிகளும் பிரமுகர்களாக ஓடியாடித் திரிந்தனர். ஊழல் நிறைந்த நிர்வாகம் தனது அதிகாரத்தினால் பணியவைத்த மாணவர் சிலரை 24 மணித்தியாலத்துக்குள் சாரணர்களாக 'அபிஷேகம்' செய்து (புனிதம் நிறைந்த சாரணர் சேவையே, உன்கதி இப்படியா போகவேண்டும்? பேடன் பவுல் துரையே, உனக்கு ஐயோ!) 'சேவை' புரியச் செய்தனர்!

கூட்டத்தில் பெற்றோர் சிலர் தங்கள் குறைகளையும், தேவைகளையும் எடுத்துச் சொல்ல முற்பட்டபோது, இந்த 'ஐக்கிய முன்னணியினர்' கூச்சலிட்டு அவர்களைப் பேச விடாது தடுத்தனர்.

ஒரு கல்விக்கூடம், அங்கு படிக்கும் பிள்ளைகளின் தொகை அவர்களின் கலாச்சார ஒருமைப்பாடு, கல்வித்தேவை முதலியவற்றின் அடிப்படையில் தரம் உயர்த்தப்படும் பொது நியதியை, கல்வி இலாகாவின் பணியை மூடிமறைத்து. தனி நபரான அதிபரின் தனிப் பெரும் முயற்சியால் தான், இது மகா வித்தியாலயமானது என்று பெற்றோர் கண்ணில் மண் தூவப்பட்டது. அடுத்து, முன்பு இருந்த அதிபர் காலத்தின் மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்துச் சொல்லாமல், தன் காலத்தில் மாணவர் அதிகம் பேர் சித்தியடைவதாகப் பசப்பப்பட்டது. உண்மையில் முந்திய அதிபர் காலத்தின் பரீட்சைப் பெறுபேறுகள் இப்போதையவிட அதிகமானது என்பதை மறைக்கமுடியாது.

மேலதிகாரிகளுக்கு. மாலை மரியாதைகள், விருந்து வரவேற்புகள் செய்து தன் தவறை மறைப்பதில் நிபுணரான இந்த அதிபர், இது காலவரை தான் செய்து 'கிழித்ததாக'ச் சொல்ல எதுவுமில்லாதபடியால், வரவேற்பு வைபவங்களில், கலந்துகொள்ளும் மேலதிகாரிகள் இப்படியான சந்தர்ப்பங்களில் வழக்கமாகப் பதிவுப் புத்தகத்தில் வியந்து எழுதும் குறிப்புகளை வாசித்துக்காட்டி, கூலிப் பட்டாளத்திடமிருந்து கரகோஷம் பெற்றார். அடுத்து, கட்டிட வசதி இன்மை தளபாடக் குறைவு, விளையாட்டு வசதி இன்மை தண்ணீர்க் குழாய்கள் போதாமை முதலிய, 4 வருடத்தில் செய்யாத காரியங்களை இனி மேல் செய்து 'கிழிக்கப்' போவதாக பீற்றினார்.

அதிபரை ஆபத்திலிருந்து விடுவிக்கப் புறக்கதவால உள் நுழைக்கப்பட்ட காரியதரிசி ''ஒரு ஆறேஆறுமாதம் கருணை கூர்ந்து இந்த அதிபரை எதிர்க்காதீர்கள். மாற்ற வேண்டுமென்று கிளர்ச்சி செய்யாதீர்கள். அதற்கிடையில், நானே முன்னின்று உங்கள் குறைகளை நிவிர்த்திக்கின்றேன்'' என்றும் வேண்டிக்கொண்டார். அத்துடன், மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவராகச் சில காலம் இருந்து 'பெரும் தொண்டாற்றிய' இவரை, இந்த ஆண்டு அந்தக் கதிரையிலிருந்து இறங்கிவிட்டார்கள். மனம் புண்பட்டுள்ள இந்த வேளையில், இந்தக் கதிரையிலிருந்தும் இறக்குவது சரியல்ல; நமது பிள்ளைகளின் தலைவிதி இப்படியிருக்கும்போது, அவரைக் குறை கூறிப் பயனென்ன? என்ற தோரணையில் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றினார்கள்.

பாராளுமன்ற ஆசன மொன்றையே குறிக்கோளாகக் கொண்டு, மாணவரின் கல்வியைப் புறக்கணித்து, தகுதியற்ற-ஊழல்கள் நிறைந்த ஒருவரின் பதவியைக் கட்டிக் காப்பதில் திரிபுவாதக் கும்பல் சகல பிற்போக்காளருடனும் கூட்டுச் சேர்ந்து, 'அதிபரை எதிர்ப்பவர்கள் தமிழரசுவாதிகள்' என்று பசப்புகின்றது. இந்தத் திருக் கைங்கர்யத்துக்காக, அப்பன் திரிபுவாதி கெனமனுக்கு, அவர், இதே தொகுதிக்கு கடந்த 16 வருடகாலமாகத் தொடர்ந்து எம். பியாக இருந்தும் கிடைக்காத மேற்படி பெ. ஆ. ச. போஷகர் பதவி இப்போது கிடைத்திருக்கிறது.

1800 மாணவர்கள் படிக்கும் இவ் வித்தியாலயத்தில் சுமார் 50 பிள்ளைகளின் பெற்றோரைத் தவிர, மற்றைய பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிக்க வேண்டுமென்று எழுத்து மூலம் விருப்பம் தெரிவித்து இரண்டு வருடமாகியும், அதை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு, அப்பன் திரிபுவாதி என்ன காரணம் சொல்வாரோ தெரியாது.

கல்வி இலாகா இதனைக் கவனியாது விட்டால், மகா வித்தியாலயம் குட்டிச்சுவராகப் போவது மட்டுமல்லாமல், எதிர்காலச் சிறார்கள் 1800 பேரின் கல்வி வளர்ச்சி அவநம்பிக்கைக்குரியதாகிவிடும். ஆகவே, கல்வி இலாகா உடனடியாக இவ் வித்தியாலயத்து ஊழல்களை விசாரணை செய்ய வேண்டுகிறோம்,

—அமிர்தலிங்கம்


விரைவில் எதிர்பாருங்கள்!

இலங்கை
கலா
மன்றம்
அளிக்கும்
முத்தமிழ் விழா!

இயல்
இசை
நாடகம்

காட்சி தரும் நன்னாள் .....?

# மகோன்னத மானிட சக்தி வெற்றி பெறும்!



## ஏகாதிபத்தியத்தின் இறுதிக் கட்டம் நெருங்கி வருகிறது

## திருமதி சுன் யட்சன் சிறப்புரை

உண்மைதான், போராட்டம் கடினமானது, துன்பமானது. தியாகம் நிறைந்தது. ஆனால், போராட்டமின்றி வெற்றியில்லை. தேசிய அடிமைத் தளையை விட ஓர் துன்பமில்லை, ஆண்டான் ஒருவரின் சவுக்கிற்கோ அல்லது கூலிச் சேவகக் கசையடிக்கோ கட்டுண்டிருப்பதை விட ஓர் கடினமில்லை; போராட்டத்தின் இழப்புகள் நீண்ட அடிமைத்தளையினதும் சுரண்டலினதும் இழப்புகளை விட எவ்வளவோ குறைந்தவை.

உலக மக்களின், குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் உணர்வு இது தான். அவர்களது ஓர் நியாயமான இலட்சியம், ஒவ்வொரு மாந்தரும் ஆழ்ந்துணரும் ஓர் அவசர தேவை. ஆகவே இப் பிரவாகம் தடுத்தற்கரிது.

2-ம் உலக யுத்தத்தின் பின்னர் மக்களின் எண்ணமும் வெற்றிகளும் இதைக் காட்டுவதோடு, போராட்டம் முடிந்துவிடவில்லை, மாறாக, இப்போது உச்ச கட்டத்தை அடைந்துள்ளது எனவும் காட்டுகின்றன.

இந்த வெற்றிகளும், உயர்ந்த அரசியல் விழிப்பும், சோராத புரட்சிகரத் துணிவும் எல்லாம் முன்காண அழிவுச் சக்தியடைந்த ஆயுதங்களைக் கொண்ட எதிரியின் முன்னிலையில் ஈட்டப் பெற்றவை. இதன் கருத்தென்ன? ஐக்கியமுற்ற மக்களின் சக்தி எந்த ஆயுதங்களையும் விடப் பலம்மிக்கது. விதியை நிர்ணயிப்பது மக்களே, எந்த ஆயுதங்களுமல்ல. இதிலிருந்து கற்கவேண்டியது: மக்களின் நியாயமான லட்சியத்தை நிறைவேற்ற போராட்டமே சரியானது; ஆகவே, ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும், அடக்கு முறையையும் சகல சுரண்டலையும், ஏகாதிபத்தியவாத யுத்தங்களையும் இயன்ற விரைவில் முடிவுக்குக் கொண்டுவர ஐக்கியப்படுத்தக் கூடிய சக்திகள் அனைத்தையும் ஐக்கியப் படுத்த வேண்டும்.

### சில உதாரணங்கள்

வெற்றி பெறுவதற்கு எதிரியை நன்கு அறிய வேண்டும். எதிரியின் தந்திரங்கள் இதனைக் கடினமாக்கலாம். ஆனால், இறுதியாக ஆராய் கையில், ஏகாதியத்தியவாதி ஏகாதியத்தியவாதியாகவே நடந்து கொள்வான். அவன் என்ன வேடம் தரித்துக் கொண்டாலும், அவனது அடியாட்கள் அவனை எப்படி அழகு படுத்தினாலும் மக்களின் கூர்ந்த பார்வைக்கு அவனது சுய ரூபம் வெளிப்பட்டே தீரும்,

ஒரு தேசத்திற்குப் பெயரளவிற் சுதந்திரம் வழங்கப்படலாம், ஆனால், பொருளாதார விலங்குகள் அடிமைத் தளையை மேலும் இறுக்கிவிடும். இதனை எதிர்க்கும் தேசபக்தர்கள் உடனடியாகக் கொல்லப் படுவர். லுமும்பா மறக்கமுடியாத ஒரு உதாரணம். ஜனநாயகம் பற்றி உரக்கப் பேசப்படலாம், ஆனால், படு பிற்போக்கு அடிவருடிகள் அதிகாரத்தில் இருத்தப்பட்டு ஏகாதிபத்திய ஆயுதபலத்தால் காக்கப்படுவர். தென்-வியட்நாம், தென்-கொரிய பாஸிஸ ஆட்சிகள் பிரத்தியட்ச உதாரணங்கள்.

ஏகாதிபத்தியவாதிகள் எல்லா தேசங்களினதும் சுய நிர்ணய உரிமை பற்றி பலத்துப் பேசுவர். ஆனால், வாழ்வு பற்றிய ஏகாதிபத்தியவாதிகளின் ''நாய்—நாயைத்—தின்னும்'' கண்ணோட்டத்திலிருந்து யாராகினும் சற்று விலகினால் அவர்களின் அமைப்புமுறை நூறு கபட பகிரங்க வழிகளிற் கவிழ்க்கப்படும். உதாரணம் கியூபாவிற்கெதிரான அமெரிக்கஏகாதிபத்தியவாத சதிகள். ஏகாதிபத்திய வாதிகளால் சமாதானம் மிகவும் புகழப் படலாம். ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மட்டும்தாம் பல இடங்களில் தொடங்கியுள்ள யுத்தங்களை நடாத்தவும், உலகை அணு நாசத்தில் அமிழ்த்துவதற்கான தயாரிப்புகளுக்கும் வருடாந்தம் 6 ஆயிரம் கோடி டாலர் செலவிடுகின்றனர்.

இவைதான் உண்மைகள்; சகலரும் காணக் கிடக்கின்ற உண்மைகள். இருந்தும் இவற்றைக் காண மறுப்பவர்கள் உள்ளனர். இவர்கள் ஏகாதிபத்தியமும் காலனியாதிக்கமும் ஏற்கனவே முடிந்துவிட்டன என எம்மை நம்பச்செய்வர். இன்னமும் அபாயகரமான ஒரு எதிரிக் கெதிராக விழிப்புடன் இருக்கவேண்டியதில்லை, வெள்ளித் தாம்பாளத்தில் நல்ல காலம் வருமளவும் காத்திருக்க வேண்டியதுதான், அதுவரை போராட்டம் அவசியமில்லை, அடக்குமுறையாளர்களுடன் சமாதானமாக சகவாழ்வு நடத்த வேண்டியதே என மக்களை நம்பச் செய்து அவர்களை ஆபத்தான விழிப்பற்ற நிலையிலிடுவர். எதிரி இப்போது ''புத்திசாலி''யாகவும், ''சமாதானமானவனு''கவும் காட்டப் படுகிறான். இவர்கள் மக்களிற் போராட்டத்தை ''முரட்டுத்தனம்'' எனக் கடிந்து, உலகின் சகல பிரச்சினைகளையும் பல ராஜ்யத் தலைவர்களிடையில் ''டெலிபோண் தொடர்பு'' (ஹொட் லைன்'') மூலம், உலகின் பிற மக்கள் நினைப்பது எதையும் பொருட்படுத்தாது தீர்த்துக் கொள்வர். ஆனால், பயத்தில் ஏகாதிபத்தியத்திற்குப் பணிபவர்கள் அதனைக் கட்டியணைக்கும் ஒவ்வொரு தடவையும் அதனால் செவிட்டில் குத்தப்படுகின்றனர். ஒரு போதும் அவர்களால் ஏகாதிபத்தியத்திற்கு வேண்டிய அளவு சரணடைய முடியாது, காரணம் இவர்கள் முற்றாக உலகிலிருந்து மறைந்து அவற்றின் தர்க்க நியாயம் போவதே ஏகாதிபத்தியத்திற்கு வேண்டியது.

சரித்திரத்தையும் இன்றைய உண்மைகளையும் நேர்மையாகக் கணிப்பிட்டால் ஒரே முடிவிற்குத்தான் வரமுடியும். உலகெங்குமுள்ள மக்கள் எழுச்சியுற்றுத் தங்கள் விதியைத் தாமே வழி நடத்த உணர்வூட்டிய புரட்சிகர கோட்பாடுகள் இன்றும் சரியானவை, அவற்றைத் திரிபுபடுத்தி இல்லாதொழிக்க முயல்பவர்களின் கீழ்த்தர முயற்சிகளை அவை கடந்து நிற்பவை.

சமீபத்தில் ஒரு பெரும் வாத விவாதம், தங்கள் சொந்த மக்களின் நலன்களையும், ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறையை எதிர்த்து இன்னமும் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் நலன்களையும், சமாதானத்தை நாடும் சகல மக்களின் நலன்களையும் கைவிட்டு ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒத்துப் போக அவதிப்படுவோருக்கும், எமது சகாப்தத்தின் உண்மைகளைக் காத்து நிற்போருக்கும் இடையில் எழுந்துள்ளது.

இலங்கை ஸ்ரீபாலி வித்தியாலயத்தில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் திருமதி சுன் யட்சன் நிகழ்த்திய உரையின் முதல் பகுதி சென்ற வாரம் வெளிவந்தது. இது இறுதிப் பகுதி.

ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்க முற்படுபவர்கள் சமாதானத்தின் பேரால் யுத்த அபாயத்தை மிக அதிகமாக்கும் பல காரியங்களைச் செய்துள்ளனர். இவற்றை அம்பலப்படுத்துபவர்களுக்கு எதிராக அவர்கள் உபயோகிக்கத் தயங்காத கீழ்த்தர அவதூறுகளும் புனை சுருட்டுகளும் கிடையாது.

இத்தகையவர்களின் ஒரு பொதுவான குணம் சீனாவையும் சீன மக்களையும் குறித்து அவர்களின் நேர்மையற்ற கண்ணோட்டமாகும். போராடும் மக்களுக்குச் சீனாவின் தளராத அனுதாபத்தையும் ஆதரவையும் அவர்கள் உலகைச் சாம்பலாக்கும் ஒரு பைத்தியக்கார ஆவலெனத் திரிக்கின்றனர். கோட்பாட்டில் சீனாவின் உறுதியான வலியுறுத்தலை குருட்டு, வரட்டுத் தத்துவ வாத கண்ணோட்டம் என்கின்றனர்.

இவர்கள் நலிவடைவதைப் பார்ப்பது பரிதாபமாக உள்ளது. ஆனால் அவர்கள் எவ்வளவு லேசாக நண்பர்களைக் கைவிடுகின்றனர் என்பதையும் உலகம் எங்குமுள்ள கோடானுகோடி மக்களுக்குச் சொல்லமுடியாத துயரம் விளைவிக்கக் கூடிய முடிவுகளை எவ்வளவு பொறுப்பற்றதனமாக எடுக்கின்றனர் என்பதையும் காணத் திகில்தான் உண்டாகும். இவர்கள் அம்பலப்படுத்தப்படவேண்டும். பணயமாக உள்ளதுவாழ்வின் சத்தியம். இந்தப் போராட்டத்திற் சீனா முன்னணியில் நிற்பதால் அது ஒருமித்த அரசியல், பொருளாதார, ராணுவ தாக்குதல்களுக்கள்ளாகிறது.

உண்மையான சர்வதேசியத்துவத்தின் ஒரு அம்சமான தேசபக்தி, தாகூரை அயல் நாடுகளின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக் கூடியவராக்கியது. சிங்கப்பூரில் சீன துறைமுகத் தொழிலாளர்களின் திறமைமிகு உழைப்பால் அவர் கவரப்பட்டார். அதினின்று அவர், சீன மக்கள் நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கற்றுத் தேர்ந்ததும் அவர்களின் துரித முன்னேற்றத்திற்கு எந்தத் தடையுமிருக்காது எனத் தீர்க்கதரிசனமாகக் கூறினார்.

மேலும் அவர், சீனா ஒரு தேசமாக மேலும் மேலும் விருத்தியுற, சுயநல வல்லரசுகள் அதனை அழிக்கும் முயற்சியில் அதிகமதிகமாக அதற்கு எதிராகச் செயற்படுபவர் என்றார். அத்தனை தெளிவாக அவர் ஏகாதிபத்தியத்தின் இயல்பையும் அதற்கு எதிராகப் போராடவேண்டிய அவசியத்தையும் புரிந்துகொண்டார்.

ஏகாதிபத்தியவாதிகள் சீன மக்களை பயமுறுத்திப் பணிய வைக்க நினைத்தனர். இதனால் பல பாரிய சுமைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என ஆயிற்று. இதுவே எம்மை முழந்தாளிடுமளவுக்கு அழுத்தும் எனக் கருதப்பட்டது. ஆனால், என்ன இருந்தாலும், ஒருவர் தம்முடன் வாழ்ந்தேதான் ஆகவேண்டும்; நேர்மையானவர்களுக்கு இதயத்தில் ஒரு பொய்யையும் கரவையும் கொண்டு வாழ்தல் இயலாதது; விசேஷமாக அது முழு மனித குலத்தினதும் பந்தோபஸ்தையும், நல் வாழ்வையும், முன்னேற்றத்தையும் சம்பந்தப் படுத்துவதாய் இருக்கும்போது இயலவே இயலாதது. முதுகை நிமிர்த்திச் சுமையைத் தாங்கிக் கொள்வதே ஒரேவழி.

—4-ம் பக்கம் பார்க்க

# தென்-வியட்நாமில் மக்கள் படையின் வெற்றி

தென் வியட்நாம் விடுதலைப் பத்திரிகைச் செய்தியின்படி தென் வியட்நாமில் தெற்கேயுள்ள வடகிழக்குப் பகுதிகளில் மக்கள் படை இவ் வருடம் ஜனவரியில் பெரும் வெற்றிகளையீட்டியுள்ளது.

இக் காலத்தில் தென் வியட்நாம் மக்கள் படை ஆயிரத்து நாற்பத்திரண்டு தாக்குதல்களை நடாத்தியது. எதிரிப் படை வீரர்கள்அறுநூற்றெழுபத்தெட்டுப்பேரைக் காயப்படுத்தி, தொளாயிரத்து முப்பத்திரண்டுபேரைக் கொன்றது. இருநூற்றி ஐம்பத்திரண்டுபேரைக் கைதுசெய்தது. அவர்கள் இருபத்தொரு எதிரி விமானங்களை வீழ்த்தினர் அல்லது நாசமாக்கினர். அப்படியே இராணுவ வாகனங்களையும், கப்பல்களையும் நாசமாக்கி ஆயுதங்களையும் மற்றும் பொருட்களையும் கைப்பற்றினர்.

ஜனவரியில் தென் வியட்நாமின் மேற்குப் பகுதியில் பத்துப் படையெழுச்சிகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகின்றது. எதிரியின் தளங்களை உடைத்தெறிந்தபின், தேசாபிமான போர்வீரர்கள் நூற்றுக்குமேற்பட்ட துப்பாக்கிகளுடன் மக்கள் பக்கம் வந்தனர்.

கிழக்குப் பகுதியில் நாற்பத்தாறு ''கண்காணிப்புக் கிராமங்களையும்'', ''புதுக் குடியேற்றக் கிராமங்களையும்'' தென் வியட்நாம் மக்கள் உடைத்தெறிந்துள்ளனர்.

# அமெரிக்க நீக்ரோக்களின் உரிமைப் போராட்டம்

அரசாங்க ரீதியான இனப் பாகுபாட்டை எதிர்த்த சட்டம் வேண்டுமெனக் கோரி பத்தாயிரம் அமெரிக்க நீக்ரோக்களும் வெள்ளையர்களும் கென்டுத்தி மாகாணத்தின் தலைப்பட்டினத்தில் சென்ற வாரம் ஊர்வலம் நடத்தினர். இவ் வூர்வலத்திற்குக் கென்டுகியிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட சாதாரண உரிமை, தொழிற்சங்க குடியுரிமைக் குழுக்கள் ஆதரவளித்தன.

மேறிலாந்திலுள்ள அன்னா பொலிசில் நூற்றுக்கணக்கான நீக்ரோக்களும் வெள்ளையர்களும், முந்திய வாரம் மேரிலாந்து பிரின்சஸ் அன்னேயில் நடைபெற்ற பொது உரிமை ஊர்வலத்தின் பொழுது பொலீசார் நீக்ரோக்களை காட்டுமிராண்டித் தனமாக அடித்ததைக் கண்டித்து சென்ற வாரம் இருமுறை ஊர்வலம் நடத்தினர். பலர் கைதாக்கப்பட்டனர்.

பிரின்சஸ் அன்னே ஊர்வலத்தின்பொழுது 60-கு மேற்பட்ட நீக்ரோ மாணவர்கள் காயமுற்றதாக ஒரு மாணவத் தலைவர் அறிவிக்கின்றார். பலர் போலிஸ் நாய்களால் கடிபட்டனர். நகரத்தின் வியாபாரிகள் அமுல் நடத்தும் இன பாகுபாட்டை எதிர்த்து மாணவர்கள் பொருளாதார பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் தமது வாக்குரிமை கோரி நூற்றுக்கணக்கான நீக்ரோக்கள் மிசிசிப்பியிலுள்ள கன்ரனில் நீதிமன்றத்தை நோக்கிப் படையெடுத்தனர். ஊர்வலத்தில் உள்ளவரைப் பயமுறுத்துவதற்கு துப்பாக்கி சகிதம் கூடுதலான பொலிஸ் படை அழைக்கப்பட்டது. எழுபத்திரண்டு விகிதம் நீக்ரோ மக்களைக் கொண்டதும், 32,904 மக்களைக் கொண்டதுமான இப்பகுதியில் 300 நீக்ரோக்கள் வாக்குரிமை பெற்றுள்ளனர் என ஊர்வலத்தின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

—தம்பி

# நிறவெறியை எதிர்த்தெழும் தென்னாபிரிக்க மக்கள்

ஜோகன்னாஸ் பரேகவை சுற்றி இருக்கும் ஆபிரிக்க கிராமங்களில் தென் ஆபிரிக்க போலிஸ் நடத்திய சோதனைகளின்பின் பதினான்கு ஆபிரிக்க தேசாபிமானிகள் இம் மாத ஆரம்பத்தில் கைதாக்கப் பட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் 'நிறவெறிக்' கொள்கைக் கெதிராகச் சதிசெய்ததாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். இதே குற்றச்சாட்டுகளின் மீது வேறு 20 ஆப்பிரிக்கர்களும் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் தமது நாட்டுப் பாஸிஸ ஆட்சிக்கெதிரான போராட்டத்தைத் தென்னாபிரிக்க மக்கள் வலுப்படுத்துகின்றனர்.

## காலமும் கருத்தும்

## மகோன்னத மானிட சக்தி வெற்றி பெறும்!

3-ம் பக்கத் தொடர்

ஒரு முது மொழி உண்டு. 'மாற்றுப்பொன் நெருப்பைக் கண்டு அஞ்சாது' பதவுரை கூறினால்: உண்மை அவதூற்றினதும் அநீதியினதும் தீ நாக்குகளை கண்டு அஞ்சாது. உண்மையின் பாதுகாப்பு எப்போதும் வளர்கிறது, சிலரின் ஆதரவிலிருந்து பெரும்பாலாரின் ஆதரவிற்கு வளர்கிறது. சீனாவும் சீன மக்களும் எதனை வேண்டி நிற்கின்றனர் என்பது பற்றிச் சிலருக்கு இன்னும் குழப்பமிருக்கலாம்; ஆனால் இது தற்காலிகமானதாகவே இருக்கமுடியும். காலம் உண்மையின் பக்கம் ஓடுகிறது. மக்களின் உரிமைகளை உயர்த்தி, அவ் வுரிமைகள் மக்களின் பரம எதிரிக்கு விற்றுவிடுவதை எதிர்த்து வீரத்துடன் நிற்போர் பக்கம் ஓடுகிறது.

சீனாவைத் தனிப்படுத்த முயல்வோர் தாமே தனிப்படுகின்றனர். இவர்கள் தங்கள் புரட்சிகர பாரம்பரியத்தை ஏகாதிபத்தியவாதிகளின்செல்லாக் காசுக்கு விற்றுவிட்டதை மக்கள், தாமாகவே உணர்கின்றனர். சீன மக்கள், தங்களைப் பிறமக்களோடு பிணைக்கும் உருக்குப் பந்தங்கள் பொது விரோதிகளுக்கெதிரான பொதுப் போராட்டம் என்ற நிலையிலிருந்து வருபவையானதால், தங்களுக்கு உலகெங்கும் நண்பர்கள் உள்ளதை அறிவர்.

மானிடத்தின் எதிர்காலம் பிரகாசமானது எனச் சீன மக்கள் கருதுகின்றனர், தங்கள் தம் எதிர்காலம் பிரகாசமானது எனக் கருதுகின்றனர். அவர்கள் காலத்திற்குப் பிந்தாது நடப்பதாயும், தமது இதயங்கள் ஏனைய மக்களின் இதயங்களோடு இரண்டற ஒருமித்திருப்பதாயும் உணர்கின்றனர். நாம் ஐக்கியமுற்றிருந்து உறுதியுடன் போராடினால், மக்களை எவரும் வெல்ல இயலாது. தோளோடு தோள் சேர, ஒருவருக்கொருவர் உதவிசெய்து, நாம் சகல தேசங்களும் சுதந்திரமாயும் சமமாயும் உள்ள சகல மக்களும் ஜனநாயகத்தையும், சமூக நீதியையும் அனுபவிக்கின்ற, மனிதனதும் அவன் கலாச்சாரத்தினதும் ஒருமையின் வெளிப்படையாக சமாதானம் ஆட்சிசெய்யும் ஒரு உலகை நோக்கி நாம் முன்னேற முடியும்.

# போரிடுவேன் இன்று

விழிகாட்டி எனைநோக்கி வியக்கின்ற மணியே!
எழிலாக உனைப்பாட இன்றிதயம் இல்லை.
அழுகிறார். அமுதின்றி விழுகின்றார் எங்கள்
தொழிலாளர் துயர்நீங்கப் போரிடுவேன் சென்று.

கட்டிலொடு மெத்தையுயர் கம்பளமும் செய்தோர்
கொட்டிலிடை கூதலுடன் குறட்டையிடும் காட்சி!
பட்டுடையில் நின்றாடும் பணக்காரர் நெஞ்சைத்,
தொட்டதிலை அவர்வீழப் போராடுவேன் சென்று.

நாட்டிலுள்ள செல்வமெலாம் நம்தோழர் நெஞ்சை
வாட்டியதால் வந்ததை வாரியொரு மூலை
வீட்டினிடை மூடுகிறார் வீணரிவர் தாவி
ஓட்டமிட நான்விரைந்து போரிடுவேன் இன்று.

செங்கொடியே எங்குமெழச் செந்தமிழர் தோழர்
சிங்களவர் யாவருமே என்றி உழைப்போரே,
திங்களென நல்லொலியைத் தீவினிடை தூயச்
சங்கொலித்து காளெழுந்து போரிடுவேன் இன்று:

உணவின்றி உடையின்றி உறக்கமெதற் கிந்தக்
கணமெங்கள் தொழிலாளர் ஒன்றாகிப் பொங்கும்
அணையாத புரட்சிவழி அகமகிழச் சென்று
இணையில்லா வெற்றிபெறப் போரிடுவேன் இன்று.

—செ. மகேந்திரன்

## அப்புத்தளையில் உங்கள் காரியாலயம்

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கத்தில் அப்புத்தளை மாவட்ட புதிய காரியாலயம் கீழ்க்காணும் முகவரியில் உள்ளதென்பதை அப்புத்தளை மாவட்டத் தொழிலாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கரவைக் கந்தசாமி,
ஊவாமாகாண
பொதுப்பிரதிநிதி,
82, மெயின் வீதி
அப்புத்தளை.

## வள்ளுவன் விழா

கடந்த மாதம் கொஸ்லாந்தைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தன்னைத் தோட்டத்தில் வள்ளுவன் விழா கொண்டாடப்பட்டது. வள்ளுவன் கல்விச் சாலையில் நடைபெற்ற இவ் விழாவுக்கு திரு. வேலன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவின் முதல் அங்கமாக, விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பின்பு நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் போல் அந்தோனி, வேலுச்சாமி, தங்கவேல், சாரதி, செல்லையா ஆகியோர் பேசினர்.

வெளி வருகிறது

கம்யூனிஸ்ட்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவ சஞ்சிகை

ஆசிரியர்: நா. சண்முகதாசன்

லெனின் வாழ்க்கையில் 1.

(புரட்சி வீரன் லெனின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை தோழர் தி. ச. இங்கு திரட்டித் தருகிறார். இது முதல்கட்டுரை.)

# வேண்டாம் விளம்பரம்

**1920-ம்** ஆண்டு மே மாதம் முதலாம் திகதி மாஸ்கோவில் மே தினம்; அன்று விடுமுறை தினமாக விருந்தும், கிரம்ளின் இராணுவக் கலாசாலை மாணவர்கள், காலை உணவின் பின் கலைந்து சென்றார்கள். தொண்டர்கள் விடுமுறை நாட்களில் மாமுல்படி செய்யும் சிரமதானத்துக்கென அன்று நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. சிறிதுநேரத்துக்குள் மாணவர்கள் கிரம்ளினுள்ள ஒரு சதுக்கத்தில் கூடினார்கள். சதுக்கத்தின் ஒரு பக்கத்தில் மரக் கட்டைகளும், பலகைகளும் குவிந்தபடி கிடந்தன. மூன்று வருட காலமாக ருஷ்யாவில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் போது, கிரம்ளினில் சேரும் குப்பை கூழங்களை சதுக்கத்தில் எறிவது வழக்கமாகி விட்டது. ஆனால், இப்போதெல்லாம் சதுக்கத்தை அழகு படுத்துவது அவசரம்.

மக்கள் கமிஸார் வேலையைத் தொடங்குவதற்கான கட்டளையை பிரஸ்தாபித்த சமயம் லெனின் அங்கு வந்து சேர்ந்தார்.

கார் காலத்தின் பிற்பகுதியில் கிரம்ளினுக்கு வந்த மாணவர்கள் லெனினைக் கோட் இல்லாமல் காண்பது இது தான் முதல் முறை. தோள் பட்டைப் பக்கத்து மேலங்கி ஒழுங்காகத் தைக்கப்பட்டிருந்தது. 1918-ம் ஆண்டு லெனினைக் கொலை செய்ய எத்தனித்தவன் சுட்ட துப்பாக்கிக் குண்டுகள் ஏற்படுத்திய வடு அதன் கீழ் இருக்கிறது என்பது சகலருக்கும் தெரிந்த விஷயம்.

மக்கள் கமிஸார் லெனின் பக்கமாகத் திரும்பி அவருக்கு மரியாதை செய்யும் வகையில் நடந்தார். லெனின் தமது கரத்தை உயர்த்தி அவரைத் தடுத்து வைத்தார்.

''நானும் கிரம்ளினில் வாசம் செய்கிறவன். எனக்கு வேலை செய்வதற்கு உரிமை உண்டு'' என்று கூறியபடி, லெனின் வேலையில் ஈடுபடலானார்.

பாரமான மரக் கட்டைகளைத் தூக்கும் போது மாணவர்கள் உற்சாகத்துடன் சிரித்தும் கதைத்தும் வேலை செய்தார்கள். கமிஸார் ஒரு கட்டையின் முன் பக்கத்தைத் தாங்கிக் கொண்டு, லெனினையும், வேறொருவரையும் மரத்தின் நடுப் பக்கத்தில் தோள் கொடுக்கும்படி பணித்தார். பளு தனக்குக் குறைவாக இருப்பதை லெனின் தெரிந்து கொண்டார்.

''என்னுடைய இடத்தில் நீர் வாரும். நான் முன் பக்கமாகச் சென்று சுமக்கிறேன் என்றார் லெனின் சிரித்தபடி.

''நான் இளைஞன் வயது 28. உங்களுக்கோ வயதேறி விட்டது..

''வயது போய் விட்டதா? மூத்தோர் சொல்லை நீர் கேட்டு நடப்பதுதானே?''—லெனின் கூறினார்.

மரக் கட்டைகள் எல்லாம் ஒவ்வொன்றாக அப்புறப்படுத்தப்பட்டன. லெனின், ஒரு இராணுவ வீரருடன் சேர்ந்து தூக்கிய மரக்கட்டையை சுவருக்கு அப்பால் எறிந்தார். வாயில் காத்த இராணுவ வீரன் மேலங்கி இல்லாமல் நின்ற லெனினை இனம் கண்டு கொள்ளவில்லை.

''ஏய்! இங்கு மரக்கட்டைகளை எறியக் கூடாது—தெரியுமா?''—இராணுவ வீரன் இரைந்தான்.

அடுத்த கணத்தில் அவன் லெனினை இனம் கண்டு கொண்டான். லெனின் மேல் கோபித்துப் பேசலாமா?

லெனின் மெதுவாக மரக் கட்டையை ஒரு பக்கத்தில் ஒதுக்கிய பிறகு, ''நண்பரே, மன்னிக்கவேண்டும். பிழைகள் ஏற்படுவதும் சகஜம் தானே!'' என்றார்.

எல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கிப்போய் நின்றிருந்தனர்.

படப்பிடிப்பாளர் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார். மாஸ்கோ பத்திரிகைகள் செய்தி அறிந்ததும், படப்பிடிப்பாளரை கிரம்ளினுக்கு அனுப்பி வைத்தார்கள்.

லெனினுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது:

''படப்பிடிப்பாளர்கள் இங்கு வேண்டாம். நாங்கள் விளம்பரம் காவிகளல்ல. விளம்பரத்துக்காக நாங்கள் இங்கு வேலை செய்யவில்லை!''

## வட அல்வாயில் முற்போக்கு வாலிபர் சங்கம்

சென்ற 29-2-64 சனிக்கிழமை இரவு 8 மணியளவில் முற்போக்கு வட அல்வாயில் முற்போக்கு வாலிபர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது. விழாவிற்கு, திரு. க. கனகரத்தினம் ஆசிரியர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வட-அல்வைக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்த்தின் சார்பில், தோழர்கள்: எஸ். தணிகாசலம், எஸ். எவ். போஜியா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சங்கத்தின் நிர்வாகிகளாக கீழ்க்காணும் தோழர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்:

தலைவர்: வி. ஐ. சிவலிங்கம், உப-தலைவர்: த. சின்னராசா, காரியதரிசி: எஸ். குலவீரசிங்கம், உப-காரியதரிசி நாகராசா, தனாதிகாரி: தர்மலிங்கம் மற்றும் ஐந்து பேரைக் கொண்ட செயல் கமிட்டி ஒன்றும், 20 பேரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இலங்கை வியட்நாம் நட்புறவுச்சங்கம்

இலங்கை வியட்நாம் நட்புறவுச் சங்க ஆரம்ப கூட்டம் இம் மாதம் 17 ம் திகதி இலங்கை தேயிலை பிரச்சார சபையில் நடைபெற்றது. செனட்டர் சந்திரா குணசேகரா தலைமை வகித்தார். இலங்கை மக்களுக்கும் வியட்நாம் மக்களுக்கும் இடையே நட்புறவை வளர்ப்பதும், இவ்விரு நாடுகளுக்கு மிடையே கலாச்சார கல்வித் தொடர்புகளை ஏற்படுத்துவதே சங்கத்தின் நோக்கமாகும். வியட்நாமின் ஒருமைப்பாட்டுக்கான வியட்நாம் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதும், வியட்நாம் மக்களுக்கு உதவுவதற்காக நிதி, மருந்து, மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைத் திரட்ட உதவுவதுமே மற்றைய பிரதான நோக்கமாகும்.

சங்கத்தின் உத்தியோகத்தர்களாகப் பின் வருபவர்கள் தெரியப்பட்டனர்-:

தலைவர்: செனட்டர் சந்திரா குணசேகரா.

உப தலைவர்கள்: கே. எம்.பி ராஜரத்தின எம்பி .டி. பி.திசநாயக்கா. எஸ்.டபிள்யு. வல்பிட்ட. வண. மெத்தகொடகுமணதிஸ்ஸதேரோ. திருமதி தேஜா குணவர்த்தன.

இணைச் செயலாளர்கள் :கே குலவீரசிங்கம். டபிள்யு.ஏ.தர்மதாசா.

பொருளாளர்: திருமதி பத்ரா குணதிலகா,

கமிட்டி அங்கத்தவர்கள்: டி. குணதாசா, பாலாதம்பு,ரத்ன தேசப்ரிய சேனநாயக்க, டேவிட் விதானபத்திரான, வண மாபலகம விபுலசாரதேரோ, எச். எம்.பி .முகிதீன், செனட்டர் றெஜி பெரேரா, எம்.எஸ். எம். வதூத்.


தொழிலாளர் வர்க்கத்தின் 21 கோரிக்கைகளையிட்டு

சங்க கூட்டுக் கமிட்டியின்

**பிரமாண்டமான பொதுக்கூட்டம்**

1964 மார்ச் 21-ம் திகதி சனிக்கிழமை மாலை 4-30-க்கு

**கோல்பேஸ் திடலில்**

நடைபெறும்.

கொழும்பு ஹயிட் பார்க்கிலிருந்து பிற்பகல் 2-00 மணிக்கு புறப்படும். இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் கிளை ஊர்வலம், மருதானை சந்தியில் பெரிய ஊர்வலத்துடன் கலந்துகொள்ளும்.


# சீர்குலைவாளர்கள் சிதறி ஓடினர்

## இலங்கைப் பத்திரிகையாளர் வருடாந்திரக் கூட்டம்

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் வருடாந்த கூட்டம், அண்மையில் தேயிலை பிரச்சார சபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. ரட்ணதேசப்பிரிய சேனநாயக்கா தலைமை தாங்கினார்.

சீர்குலைவாள திரிபுவாதக் கும்பல் மாநாட்டைக் குலைக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி அடைந்தன.

சுபைர் இளங்கீரன், ரட்ண தேசப்பிரிய சேனநாயக்கா, தர்மசிறி ஜெயக்கொடி, எச், எம்.பி.முகிதீன், எஸ். தியாகராஜா (வீரகேசரி) ஆகியோர் உட்படப் பலர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சீர்குலைவாளர்களின் தலைமை உருவாக நின்ற திருவாளர் கே.எம்.சிறினே, திரு.ரட்ணதேசப்பிரிய சேனசாயக்காவுக்கு எதிராகத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். ஆனால், அவரது பெயரை யாரும் ஆமோதிக்காமல் போகவே, தேசப்பிரிய சேனநாயக்காவின் பெயர் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நூற்றுக்கு அதிகமான பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## அனுதாபம்

''சாவகச்சேரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க உறுப்பினரும், தொழிலாளி வாசகருமான தோழர் சி. செல்லையாவின் அருமைத் தாயார் கடந்த13-3-64-ந்திகதி காலமானமையை முன்னிட்டு அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும்எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.


★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

**இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்**

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6 , ராணி வீதி, கோட்டை.

# மேலும் மேலும் வெற்றிகள் ஈட்டி வாகைசூடும் சி. டி. யூ. எப்.

1. சினிமாஸ் லிமிட்டெட், சிலோன் எண்டர் டயின் மென்ட், லிபர்ட்டி தியேட்டர், நியூ இம்பீரியல் டாக்கீஸ் ஆகியவற்றில்-

சி. டி. யு. எப். இறுதியில் 1. 1. 62 ல் இருந்து பாக்கிகளுடன் அரசாங்கள வு பஞ்சப்படி வென்றுள்ளது. முந்திய கைத்தொழில் கோர்ட்டின் தீர்மானத்தை எதிர்த்த முதலாளிமாரின் அப்பீலை சுப்ரீம் கோட் சென்ற கிழமை தள்ளுபடியாக்கியுள்ளது.

2. பிரிட்டிஷ் சிலோன் கார்ப்பரேஷன் லிமிட்டெட்டில்-

பஞ்சப்படியில் 20 சத உயர்வை, 1.2.64 ல் இருந்து கொடுக்கும் படியாக சி.டி.யு.எப். வென்றெடுத்துள்ளது. வருடத்திற்கு 3 நாள் சமயோசித (காசுவல்) லீவையும், உழைக்கும் திறமையை இழந்து விட்டதாகக் கூறிச்சம்பளம் இழந்த தொழிலாளர் கட்கு தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டத்தின் கீழ் இரு வருடப் பாக்கிகளுடன் சம்பளத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளது. போக்குவரத்துத் தொழிலாளர்கட்கு மாதத்திற்கு ரூபா 15/- ரூபா 5/- உயர்வை வென்றெடுத்துள்ளது.

3. வெள்ளவத்தை ஆலையில்-

பெண் தொழிலாளர்களைப் பொறுத்த முந்திய ஒப்பந்தங்களையும், தீர்ப்புக்களையும் நிர்வாகம் அமுலாக்க வில்லை என்பதும், முந்திய சங்கம் அவை பற்றி யாதொன்றும் செய்யவில்லை எனவும், எமது 22 கோரிக்கைகள் பற்றிய தற்பொழுதைய விசாரணையின் பொழுது தெரிய வருகின்றது. எல்லாப் பெண் தொழிலாளர்கட்கும் 1. 4. 64 ல் இருந்து நாளுக்கு ரூபா 1.05 க்கு சம்பளத்தை உயர்த்தவும், இரண்டு வருடப் பாக்கிகள் கொடுக்கவும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆண் தொழிலாளர்கட்குக் கொடுப்பது போலவே பெண் தொழிலாளர்கட்கும் அதே விழா முன் பணம் (அட்வான்ஸ்) கொடுக்க முதல் முறையாக ஒத்துக் கொண்டுள்ளது.

4. அயிட்கன் ஸ்பென்ஸ் லிமிட்டெட்டில்-

எல்லா அச்சகத் தொழிலாளர்கட்கும் 50 சதம் பெறுமதியான இலவச மதிய போசனத்தையும்,இரு இலவச தேநீர்களையும் சி.டி.யு.எப். வென்றெடுத்துள்ளது.

5. பாட்டா லிமிட்டெட்டில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 89 விகிதம் தொழிலாளர்கள் சி.டி.யு.எப்-க்கு வாக்களித்தனர். புதிய சம்பளத் திட்டம் பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன,

6. கொழும்பு அப்போதிக்கரீஸ் அச்சகப் பகுதியில்-


தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கட்கு வருடத்திற்கு ரூபா 2.50 சம்பள உயர்வு வேண்டும் என்ற சி. டி. யு. எப்- இன் கோரிக்கையை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. தேர்ச்சி மிக்க தொழிலாளர்கட்கு ரூபா 5/- சம்பள உயர்வு பற்றிய கோரிக்கையை நிர்வாகம் பரிசீலிக்கினறது. ரூபா 4/- சம்பள உயர்வு அளிக்க அவர்கள் விருப்பமாயுள்ளனர்.

எமது மகத்தான பாரம்பரியத்தில் கிடைத்துள்ள பெரும் வெற்றிகள் இவை.

# செங்கொடிச் சங்க போராட்டம்

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த ஃரோசாளை அக்ர ஓயா தோட்டத்தில் மாரியப்பன் திருவிழா சம்பந்தமாக செங்கொடிச் சங்க அங்கத்தவர்களுக்கும் இ.தொ.கா அங்கத்தவர்களுக்குமிடையில் தகராறு இருந்து வந்தது. இது பற்றி அட்டன் தொழில் கந்தோரில் ஒரு விசாரணை நடைபெற்றது. 9ந் திகதி செங்கொடிச் சங்க, இ.தொ.கா. பிரதிநிதிகளும் தோட்டத் துரையும் இவ் விசாரணையில் கலந்து கொண்டனர். செங்கொடிச் சங்க அங்கத்தவர் இருவர் இ. தொ. காங்கிரசைச் சேர்ந்த இருவர் ஆகியோரைக் கொண்ட கோயில் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி திருவிழா நடத்த இவ் விசாரணையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

அட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்ட கொலைவிளாத்தங் கொடை தோட்டத்திலுள்ள செங்கொடிச் சங்க கவ்வாத்து தொழிலாளர்கள், தங்களுடைய கோரிக்கைகளை துரை ஏற்றுக் கொள்ளாவிட்டால் கவ்வாத்தை ஆரம்பிக்க முடியாதென போராட்டம் செய்து வருகின்றனர். இது சம்பந்தமாக செங்கொடிச் சங்க பிரதிநிதியும், அட்டன் தொழில் கமிஷனரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



# மலைநாட்டுத் தொழிலாளரின் சிறப்பான எதிர்காலம்

## பொகவந்தலாவையில் செங்கொடிச் சங்கக் கூட்டம்


"மலைநாட்டுத் தொழிலாளர்கள் தமது வாக்குரிமைக்கு மட்டுமின்றி, தமது தொழிற் சங்க உரிமைகளுக்கும், வாழ்வுரிமைக்கும் விட்டுக்கொடாத, அயராத போராட்டம் நடத்தவேண்டும்'' என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் பொகவந்தலாவையில் நடைபெற்ற இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் (செங்கொடிச் சங்கம்) கூட்டத்தில் உரை நிகழ்த்திய இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், ''நீண்ட நெடுங் காலமாக மலைநாட்டுத் தொழிலாளர்கள் இன ரீதியான ஸ்தாபனங்களில் சேர்ந்து வந்தனர். இதனால், வர்க்க அடிப்படையான ஒற்றுமையும், அரசியல் போதமும் இல்லாது அவர்கள் இயங்கி வந்தனர். ஆனால், இன்று அவர்கள் வர்க்க ரீதியாக ஒன்று திரள ஆரம்பித்திருப்பதுடன், சிங்களத் தொழிலாளர்களுடனும் ஐக்கிய முற்றுப் போராட முன் வருகின்றனர். மலைநாட்டுத் தொழிலாளர்களின் எதிர்காலம் சிறப்புடையது, வெற்றிதரத் தக்கது என்பதற்கு இது நல்ல ஆரம்பமாகும்'' என்றார் தோழர் சண்முகதாசன்.

'தீப்பொறி' ஆசிரியர் அந்தெணி சில் பேசும்போது, ''சமஷ்டிக் கட்சி சாதித்தது ஒன்றுமில்லை. தமக்கு வாக்களித்த வட-பகுதி தமிழ் மக்களுக்கு இதுவரை தூசுப் பிரமாணம் கூட தொண்டாற்றாத இத் திருக்கூட்டம், மலைநாட்டுத் தமிழர்கள் ஒருபோதும் பலியாக மாட்டார்கள்'' என்றார்.

தோழர்கள் ரொசாரியோ, ஓ.ஏ. ராமையா, சத்திவேல் ஆகிய செங்கொடிச் சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்கள்.

பொதுக் கூட்டத்திற்கு முன் பிரமாண்ட ஊர்வம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். (ந.நி)




# பதுளை நகரசுத்தித் தொழிலாளர் வெற்றி

## போராடி சம்பளம் பெற்றனர்

பதுளை நகர் சரித்திரத்திலேயே முதன் முறையாக நகரசுத்தித் தொழிலாளர்கள், குறிப்பிட்ட தினத்தில் சம்பளம் கொடுக்காது நினைத்த நேரத்தில் சம்பளம் கொடுத்துவந்த பதுளை யூ. என். பி. நகரசபை நிர்வாகத்தை எதிர்த்து 3-ந் தேதி திடீர் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

நகரசுத்தித் தொழிலாளர்களின் இந்தச் சாதாரண கோரிக்கையை ஆதரித்து இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்கள் சங்கத்தின் பிரதிநிதி தோழர் எச். ஜி. ஏ. த சில்வா அவர்களும்,தோழர் அ. ராமநாதனும் நகரசபை எதிரில் தொழிலாளர்களைத் திரட்டிப் பேசினார்கள். இவ் வேளையில் பொலிஸார் தலையிட்டு கூட்டம் நடத்தவிடாது பலாத்கார செய்ய வந்தார்கள், தொழிலாளர்கள் இதைக் கண்டித்து இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பதுளைக் கிளைக் காரியாலயத்தில் (குமாரசிங்க வீதி) திரண்டார்கள்.

தோழர் எச்.ஜி.ஏ.த சில்வா பேசும் போது யூ. என். பி. நகர நிர்வாகத்தின் ஊழலையும், இவ் வேலை நிறுத்தத்தை முறியடிக்க பிற்போக்கு வாதிகளும், பொலிஸும் முன்வந்ததைக் கண்டித்தார். நகரசுத்தித் தொழிலாளர்கள் தங்கள் மாத சம்பளத்தை 3-ந் தேதி வேண்டுமெனக் கேட்பது அநியாயமான கோரிக்கையா? இல்லை, இந்த நியாயமான கோரிக்கையைப் பெறும்வரை போராட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் தோழர்கள் டி.எம். சிரிபண்டா, பீ. ஆர். அந்தரவித்தா, செல்லையா, ஜே. ஜி. தோமஸ் பெரேரா, பெத்தான், டிங்சிரி பண்டா, அப்பாவு ஆகியோரைக் கொண்ட ஒரு போராட்டக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

மறுநாள் 4-ம் தேதி காலையில் மேயர் ஒவ்வொரு மாதமும் 3- தேதி சம்பளம் தருவதாகவும்,வேலை நிறுத்தம் செய்ததற்குபழிவாங்குவதில்லை என்றும் ஒப்புக்கொண்டார்.

வேலை நிறுத்தம் முடிந்தது. தொழிலாளர்கள் சம்மதத்தைப் பெற்று வெற்றிக் கோஷத்தோடு வேலைக்குச் சென்றார்கள். (ந.நி)

# பாட்டாளிவர்க்கபுரட்சி முதல் அனுபவம்

# 'அண்டத்தையும் அதிரவைத்த' பாரீஸ் கம்யூன்

"தொழிலாள வர்க்கம் ஆட்சி கைப்பற்ற வேண்டுமா? இவர்கட்கு ஆளும்முறைதான் தெரியுமா? ஆளுவதற்குத் தகுதியுண்டா?'' நவீன திரிபு வாதிகள் அலறும் இக் கேள்விகள் இன்று நேற்று கேட்கப்பட்ட ஒன்றல்ல. சரித்திரத்தில் பலமுறை கேட்கப்பட்டு தகர்த்தெறியப்பட்ட கேள்விகள்.

இக் கேள்விகளை முதல் முறையாக (அனுபவ வாயிலாக) தவிடு பொடியாக்கி சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்ற பொன்னுள் 18-3 1871. ஆம் 93 ஆண்டுகள் முன்னர் நடைபெற்ற பாரீஸ் கம்யூன்.

இற்றைக்கு 93 ஆண்டுகள் முன்னர் 17-3-1871 அன்று பாரீஸ் நகர தொழிலாள வர்க்கம் செங்கொடியை பட்டொளி வீசும் வண்ணம் உயர்த்தி, சரித்திரத்தில் முதன் முறையாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, பாரீஸ் கம்யூனை அமைத்தனர். அரசாங்க யந்திரத்தை உடைத்தெறிய, புரட்சித் தொழிலாளரின் முதல் முயற்சியை வீர காவியமாக பாரீஸ் கம்யூன் சித்தரித்தது.

பாரிரீஸ் கம்யூன் 72 நாட்கள் மட்டுமே நிலைத்து நின்றது. புரட்சி, அதன் குறிக்கோளை அடையவில்லை என்ருலும், மிக முக்கியத்துவம் வாய்ந்த சரித்திர அனுபவமாக, உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேற்றமாக, நூற்றுக்கணக்கான திட்டங்களையும் விவாதங்களையும் விட எவ்வளவோ கூடியளவு நடைமுறை அனுபவமாக பாட்டாளி வர்க்கம் கருதுகின்றது. கம்யூனை அமைப்பதற்கான போராட்டத்தில் வெளிக் காட்டிய பாட்டாளி வர்க்க சக்தி, புரட்சி உணர்ச்சி மறக்க முடியாத அனுபவமாக மிளிருகிறது.

பாரீஸ் கம்யூனுக்கான போராட்டத்தின் அனுபவங்களை மார்க்ஸும், ஏங்கெல்ஸும் வெகுவாக மதித்தனர்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க கையாளப்படும் எவ்வித முயற்சியும் நம்பிக்கை இழந்த நிலையில் செய்கிற அறியாமை என்று 1870-ம் ஆண்டு புரட்டாசி மாதத்தில், அதாவது கம்யூனிற்கு சில மாதங்களுக்கு முன் பாரீஸ் தொழிலாளர்களை மார்க்ஸ் எச்சரித்தார். பூர்ஷுவா ஆட்சியை மாற்றுவதற்கு காலம் பக்குவமடையவில்லையென மார்க்ஸ் எண்ணினுர். ஆனுல், 1871 மார்ச் மாதத்தில் ஒரு உறுதியான போர், தொழிலாளர் மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட பொழுது, அளர்கள் அதை ஏற்றுகொண்டனர். புரட்சி எழுந்ததும் பாட்டாளி வர்க்க புரட்சியை மிகுந்த உற்சாகத்துடன் வர வேற்ருர். மக்கள் கிளர்ச்சியை மிவும் பாராட்டினுர், கம்யூன் வாதிகளின் வீரம் மார்க்ஸ்க்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது'' ''அண்டத்தையும் அதிரச்செய்தனர்'' என்று மகிழ்ந்தார். இரண்டாம் நாள் போராட்டத்தின் பின் உழைக்கும் தொழிலாளர் சங்கத்திற்கு எழுதிய கடிதத்தில் ''இந்த பாரீஸ் மக்களிடம் எவ்வளவு ஆற்றல், எவ்வளவு உணர்ச்சி, எவ்வளவு தியாக உள்ளம்'' என வியந்து மகிழ்ந்தார்.

தொழிலாளி வர்க்க போராட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அடிப்படை பிரச்சினை, ஆட்சியும் அரசாங்கமும் பற்றிய மார்க்ஸிஸ தத்துவத்தின் ஆணிவேர்.

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது, ஜனநாயகத்துக்காக நிகழும் போராட்டத்தில் வெற்றி காண்பது, தொழிலாளி வர்க்கப் புரட்சியில் முதல்படி'' என்று மார்க்ஸ், ஏங்கெல்ஸ் பொதுவுடமை அறிக்கையில் சர்வாதிகாரத்தினை அமைப்பதற்கான கடமையை ''பாட்டாளி வர்க்கம், பூர்ஷுவா அரசாங்க இயந்திரத்தை தகர்த்தெறிய வேண்டும்'' என பொதுவாக குறிப்பிட்டார்.

''பாரிஸ் கம்யூன் உண்மை இரகசியம் இதுதான். அது முக்கியமாக ஒரு பாட்டாளி வர்க்க அரசாங்கம் சுரண்டும் வர்க்கத்திற்கு எதிராக, விளைவிப்போரின் போராட்டத்தால் ப்விளைந்த ஒரு விளைபொருள். உழைபாளிகளின் பொருளாதார மீட்சிக்காக உருவாக்கப்பட்ட அரசியல் தோற்றம்.''

தகர்த்து எறியப்பட்ட அரசாங்கத்திற்குப் பதிலாக கம்யூன் முழு ஜனநாயகத்தை அமைத்தது. நிரந்தர இராணுவத்தை அழித்து விடுவது, திரும்ப அழைக்கும் உரிமையோடு எல்லா அதிகாரிகளையும் தேர்ந்தெடுப்பது ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

பழங்கால கெடுபிடி பட்டாளத்தை அழித்து, ஆயுதம் தாங்கிய மக்களால் ஈடு செய்தது. பிற்போக்கு போலிஸ் முறை தூக்கி எறியப்பட்டது. கம்யூன் ஆட்சியில் எல்லா அதிகாரிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வதிகாரிகள் எந்நேரமும் திருப்பி அழைக்கப்படலாம். அவர்கள் பொதுவான தொழிலாளி பெறும் சம்பளமே பெற்ருர்கள்.

கம்யூன் சாம்ராஜ்யத்திற்கு நேர்மாருக மன்னர் ஆட்சிக்கு வர்க்கத்தின் இதயத்தில் கோ

பதிலாகத் தோன்றிய குடியரசு மட்டுமல்ல, வர்க்க ஆட்சிக்கே பதிலாகத் தோன்றிய குடியரசு.

ஃ ஃ ஃ

''தொழிலாளவர்க்கம்ஆட்சி கைப்பற்றக் கூடாது. போராடுவதோடு நிற்பாட்டி, ஆட்சிப் பொறுப்பை படித்த மேதா விலாசங்களிடம் விட வேண்டும்'' என்ற கூவல் நிலைத்து நின்ற காலத்தில், ஆட்சிப் பொறுப்பை கொண்டு நடத்த முடியாதவர்கள் தொழிலாளிகள் என்று ஏளனம் செய்த நாட்களில், பிதற்றியோர்க்கு பித்தம் தெளிய வைக்க வெனபாரிஸின் உழைக்கும்உன்னத உத்தமர்கள் வீறுகொண்டெழுந்து, கண்டோர் வியக்கும் வண்ணம் ஆட்சியைக் கைப்பற்றியது மட்டுமின்றி தொழிலாளிவர்க்கத்தின் நிலையான ஆட்சிக்கு முன்தோன்றலாக பாரீஸ் உழைக்கும் மக்களின் கம்யூன் காலம் காலமாக உலகத்து பாட்டாளி மக்களால் மனதில் கொள்ளப்படும் கம்யூனின் தியாகிகள் (கிட்டத்தட்ட 39,000) தொழிலாளவில்களாக திகழ்வார்கள். கம்யூனின் எதிரிகளை (திரிபுவாதிகள் உட்பட) மதவாதிகளால் கூட மீட்கமுடியாத, அளக்கமுடியாத ஆழச் சாக்கடையில் சரித்திரம் தள்ளியுள்ளது. இலங்கையில் (படிக்காத) மேதைகள் கம்யூன் வாதிகளை பின்பற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழக கம்யூன்!

---

# ஒரு வார்த்தை

## மந்திரிப் பதவி

சுதந்திரக் கட்சி ஆட்சியினர் சென்ற வாரம் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளைப் பல மாதங்களுக்கு ஒத்திப்போட்டது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பாராளுமன்றத்தின் மூலம் எல்லாம் சாதிக்க ஒரே நாட்டம் கொண்டிருந்த 'பெரியார்கள்', தமது சாதனைக்கு வேறு 'இடம்' தேடவேண்டிய நிலை ஏற்பட்டது.

பாவம், அவர்களின் பாராளுமன்ற பூச்சாண்டியை, ஸ்ரீமா அரசாங்கம் தந்திரமாக சாகடித்து விட்டது.

இதைத் தொடர்ந்து, பிலிப் குணவர்த்தனவும், டாக்டர் என். எம். பெரேராவும் அரசாங்கத்தில் பதவி ஏற்பதாக அடிபட்டு வரும் வதந்தி, இடதுசாரித் தலைவர்கள் மேலே மேலே உயர குறுக்கு வழி கண்டுபிடித்து விட்டார்கள் என்பதை அறிவுறுத்தியது.

ஐக்கிய இடதுசாரி முன்னணியிலுள்ள இரண்டு கட்சிகளின் தலைவர்களினது பெயர்கள் மந்திரிப் பதவிகளுடன் எக்கச் சக்கமாக அடிபடத் தொடங்கியுள்ளது, இடதுசாரி இயக்கத்தினுள் பூகம்பத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஐக்கிய இடதுசாரி முன்னணியின் கதி என்ன?

ஐ. இ. மு. யின் மேல் மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு என்ன ஆவது?

அத்தகைய கேள்விகள் மக்கள் மத்தியில் பூதாகாரமாக உருவெடுத்து வருகிறது.

இடதுசாரித் தலைவர்களின் வண்டவாளம், 'போராட்டப் பேச்சு' எல்லாம் 'பூ' இவ்வளவுதானு என்று மக்கள் கிண்டல் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்கத்தில் பெரும் மாற்றங்கள் உருவாகப் போவதாக சென்ற வாரம் எம். ஈ. பி. பத்திரிகை தீர்க்கதரிசனம் கூறியுள்ளது, 'மந்திரிப் பதவி' செய்திகளில் சில உண்மைகள் இருப்பதாக ஊகிக்க முடிகிறது.

திரிபுவாதம் 'வெற்றி' நடை போடுகிறது-ஆம், நாசத்தை நோக்கி!

சாட்டை

---

● நினைவு

# தோழர் ஸ்டாலின் நெஞ்சுரமிக்கவர்!

## செஞ்சேனையின் நம்பிக்கைக்குரிய உத்தமத் தலைவர்!

—ஜோர்ஜ் டிமிட்ராப்—

காலம்: இரண்டாம் உலக மகாயுத்தம். ஜெர்மன் படைகள் மாஸ்கோ முனையை வந்தடைந்தார்கள். அமைதியில்லாத நிலைமை, பயங்கரமான சூழ்நிலை அப்பொழுது எங்கும் நிலவியது. சோவியத் அரசு ''கியூபிஷேவ் நகரத்துக்கு மாற்றப்பட்டது, ஆனுல் ஸ்டாலின் மட்டும் மாஸ்கோவிலிருந்து நகரவில்லை. அந்தவேளையில் நானும் கிரெம்ளினில் அவருடன் இருந்தேன். அரசாங்க ரிக்கார்டுகளெல்லாம் அங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றப்பட்டன. அந்த சமயத்தில் ஜெர்மன் விரோதப் படைக்கு கோமின்டங் (சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாயனம்) ஒரு முறை வேண்டுகோள் விட்டால் நல்லதென்று நான் ஸ்டாலினிடம் சொன்னேன். அந்த அறிக்கையினுல் பலன் ஒன்றும் இருக்காது ஏன்று நினைத்தபொழுதும் ஸ்டாலின் அதற்கு ஒத்துக்கொண்டார், பிறகு நானும் மாஸ்சோவை விட்டுப்போக நேர்ந்தது. ஆனுல் ஸ்டாலின் அவ்வளவு சிக்கலான நேரத்திலும்கூட மாஸ்கோவை விட்டுப் போகவில்லை. நகரத்தைச் காப்பாற்றுவதற்கே துணிந்துவிட்டார். அந்த ஆபத்தான சோக நிலையில் இருந்தபொதும்கூட ஸ்டாலின் ''அக்டோபர் மகா புரட்சி'' ஆண்டு விழா தினத்தன்று செஞ்சதுக்கத்தில் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்புக்கு ஏற்பாடு செய்தார், தலைவனின் முன்னிலையில் செஞ்சேனை செஞ்சதுக்கத்துக்கு அணிவகுத்துச் சென்றது, அன்றைய தினம் ஸ்டாலின் மாஸ்கோவிலேயே இருக்கிருர் என்று தெரிந்துகொண்டதும், அவருடைய பேச்சைக் கேட்டதும் மக்கள் அடைந்த மகிழ்ச்சியை வர்ணிப்பதற்கு சாத்தியமற்றது, மாஸ்கோவில் ஸ்டாலின் இருந்ததும் அவர் பேச்சைக் கேட்டதும், மக்களும், படைகளும் அளவில்லாத நம்பிக்கை அடைந்தார்கள். அந்த மாபெரும் நம்பிக்கைதான் செஞ்சேனையின் வெற்றிக்குப் பெரிதும் வழி வகுத்துவிட்டது.

நன்றி: செங்கொடி

# இடதுசாரி ஐக்கிய முன்னணி பற்றிய எமது கண்ணோட்டம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர் மத்தியிலும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மத்தியிலும் சென்று, இடதுசாரி இயக்கத்தின் ஐக்கியத்திற்கு நாம் விரோதிகளென்றும், எமது மறைமுகமான நோக்கம் இடதுசாரி ஐக்கிய முன்னணியைக் குலைப்பதென்றும், நிரூபிப்பதற்குத் திரிபுவாதிகள் தம்மாலியன்ற பிரயத்தனம் யாவும் செய்கின்றனர். இடதுசாரி இயக்கத்தின் ஐக்கியம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமாதலால் இதைப்பற்றிய எமது கண்ணோட்டத்தை மறுபடியும் கூறவேண்டியதவசியம்.

## நாம் விரோதிகளல்ல

மார்க்ஸிஸ-லெனினிஸ்டுகளாகிய நாம் இடதுசாரி இயக்கத்தின் மத்தியிலுள்ள ஐக்கியமின்மையை எப்போதும் கண்டித்துள்ளோம். ணிப்பதற்கு எப்படி தொழிலாளி வர்க்கத்தையும், முற்போக்கு சக்திகளையும் வழி நடத்திச் செல்வது என்பதில் தான் இடதுசாரி ஐக்கியம் அமைதல் வேண்டும்.

## எமது பணி

இப்பேற்பட்ட ஒற்றுமை ஏற்படின், முதல் படியாக ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் முறியடிக்கும் முயற்சிகளில் ஒற்றுமை வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் ஏற்படும் ஒற்றுமை எந்த வகையிலும், ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான போராட்டத்திற்கும் அமையமுடியாது. இன்றைய ஐக்கிய முன்னணி இந்த அடிப்படையில் மட்டும் ஐக்கியப்பட்டுள்ளதுதான் கவலைக் குரிய விஷயம், இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கொள்கைத் திட்டம் மிகச் சிறந்ததாக இருப்பினும் ஏகாதிபத்திய விரோதக் கட்சிகள் யாவும், அதனை ஏற்றுக் கொள்ளும்இத்தகைய வேலைத் தர்ப்ப வாதத் தொடர்புகள், அல்லது விட்டுக் கொடுப்புகள் நீண்டகால ஐக்கியத்துக்கு உகந்ததல்ல. ஆதலால்தான் நாம் எப்போதும் இடதுசாரி இயக்கத்தினுள் கொள்கை ரீதியான விவாதங்களை விரும்புகிறோம். வர்க்க விரோதிகள் மத்தியில் உள்ளது போல் அல்லது இவ்விவாதங்கள் ஓர்அணியில்நிற்கும் நண்பர்கள் மத்தியில்,இடதுசாரிக் கட்சிகள் ஐக்கியப்பட வேண்டிய கொள்கைகள் பற்றியதாக இருக்க வேண்டும். ஒரு சில தலைவர்கள் மக்களுக்கு அப்பால் நின்று, தனது கட்சி அங்கத்தவர்கட்குக் கூடத் தெரியாமல் ஐக்கியப் பேச்சுவார்த்தைகள் நடத்தல் தவறு.

## மக்கள் கலந்த விவாதம்

வெளிப்படையாக விவாதிப்பது ஐக்கியம் ஏற்படுவதற்குப் பாதகம் ஆகும் மேற்கூறிய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## வர்க்க நலன்

இப்பேர்ப் பட்ட ஓர் நிலை, ஓர் பரந்த முன்னணியில் அல்லது பலவர்க்கங்களின் முன்னணியில் இருக்கலாம், அல்லது இருக்க விடலாம். ஆனால் இடதுசாரி முன்னணியில் ஒரே ஒரு வர்க்கத்தின் நலனைக் கொண்ட முன்னணியில், தொழிலாள வர்க்கத்தின் முன்னணியில், சரியான ஒரே ஒரு கொள்கைக்குத்தான் இடமுண்டு தொழிலாள வர்க்கத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட சரியான கொள்கைகள் இருக்க முடியாது. சரியான கொள்கை எது என்று தீர்மானிப்பதற்கு, சரியான கொள்கைக்கும், பிழையான கொள்கைக்குமிடையே மோதல் ஏற்படுவதவசியம். இப் பேர்ப் பட்ட தர்க்க இயல் ரீதியில் தான் தவறற்ற கொள்கையைநாம் அனுஷ்டிக்க முடியும். இப் பேர்ப்பட்ட கொள்கைக்கான விவாதம் வெளிப்படையாக கட்சி அங்கத்தவர்கள் மத்தியிலல்லாது மக்கள் முன்னிலையிலும் நடத்தப்பட உடன்பாடு சில இடதுசாரிகள் பாராளுமன்றம் செல்வதற்கான ஓர் தேர்தல் ஒப்பந்தம் மட்டும் என்று கருதத் தோன்றுகிறது. இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் எமக்குள்ளே முக்கிய தகராறு இதைப்பற்றியதே.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தோற்றத்தை வரவேற்கு முகமாக ஆயிரக்கணக்கான மக்கள், சுதந்திர சதுக்கத்தில் அணி திரண்ட போது, இடதுசாரிக் கட்சிகள் பல இலட்சக் கணக்கானவர்களை ஆகர்சித்த தமது பழைய தெளிவு பட்ட புரட்சிகரக் கொள்கைகளுக்காக ஒன்று சேர்கின்றனர் என்ற ஆவலுடன்தான் அதை வரவேற்றனர். இடதுசாரித் தலைவர்கள் இன்று வெளிப்படையாகவே புரட்சி என்ற கோஷத்தை உதறித் தள்ளி, இலங்கையின் சூழ் நிலைக்கு புரட்சியும், தியாகமும் உகந்ததல்ல என்று உபதேசம் செய்வதைக் கேட்பவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றமாகவிருக்கும். வானளாவப் புரட்சிக் கர்ஜனைகள் செய்த சிங்கங்கள், சடுதியாக பல்லில்லாத குடுகுடு கிழவிகள் போல் மாறிவிட்டனர்.

# புரட்சிகர இயக்கங்களுக்கு தலைமைதாங்கும் போராட்ட அணியாக்குவோம்

இந்த நாட்டில் தொழிலாளி வர்க்கத்திற்கும், எல்லா முற்போக்கு வாதிகளுக்கும், புரட்சிகரமான மார்க்ஸிஸ-லெனினிஸத் தத்துவத்தின் அடிப்படையில், தனி ஒரு இடதுசாரிக் கட்சி அவசியமென்பதை நாம் என்றும் உணர்ந்துள்ளோம். இந்த நாட்டின் இடதுசாரி இயக்கம் கூடிய பரந்த அளவு செல்வாக்குப் பெற்றிராததும், கூடிய வெற்றிகளை ஈட்டியிராததும், தொடர்ச்சியாக இடதுசாரிக் கட்சிகளிடையே இருந்துவந்த பேதங்களினாலும், போட்டிகளினாலும் என்பது நீண்ட நாட்களாக நாம் திடமாக நம்பியிருந்ததாகும். அதேபோல் புரட்சிகர மார்க்ஸிஸ-லெனினிஸத் தத்துவத்தின் அடிப்படையில் இடதுசாரி இயக்கத்தின் ஐக்கியம் ஏற்படாது, இடதுசாரி இயக்கத்திற்கு முன்னேற்றமில்லை; ஏனைய முற்போக்கு சக்திகளை தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்ல தொழிலாளி வர்க்கத்தினால் முடியாது என்பதும் எமது நம்பிக்கை.

ஆனால் நாம் எதிர்பார்த்த ஐக்கியம், பலவருடம் இடதுசாரி இயக்கத்தைப் பிளவு படுத்தியிருந்த முக்கியமான பிரச்சினைகளைக் கணக்கிலெடுக்காது, அல்லது கவனம் செலுத்தாது ஏற்படும் சந்தர்ப்பவாத ஐக்கியம் அல்ல. அதாவது ஒரு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தையோ, ஒரு சில இடதுசாரித் தலைவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பும் ஓர் தேர்தல் முன்னணியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

உண்மையான எல்லா இடதுசாரிகளைப் போல் நாம் எதிர்பார்த்தது, புரட்சிகர மசர்க்ஸிஸத் தத்துவத்தின் அடிப்படையில் கொள்கை ரீதியான ஒற்றுமை. ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணத் திட்டத்தில் ஏற்பட்ட ஐக்கியம் இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட போதிலும், அது இடதுசாரி முன்னணி ஆகாது. இது ஓர் ஏகாதிபத்திய முன்னணி மட்டுமே.

## சோஷலிஸம் எமது லட்சியம்

ஆனால் இடதுசாரிக் கட்சிகள், இந்த முதற்படியில் மட்டும் திருப்தியடைய முடியாது. இந்த நாட்டிலோர் சோஷலிஸ சமுதாயத்தைத் தோற்றுவிப்பதே இந்தக் கட்சிகளின் தெளிவுபட்ட நோக்கம். ஆதலால் உடனடித் திட்டமான, ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத வேலைத் திட்டத்தில் ஒற்றுமை காணுவதுடன் இடதுசாரிக் கட்சிகள் நேர்மையுள்ளனவானால், தமது இறுதி இலட்சியமான சோஷலிஸ நிர்மாணத்திட்டத்திலும் ஒற்றுமை காணவேண்டும். இப்பேற்பட்ட அடிப்படையில் ஏற்படும் ஐக்கியத்தைத்தான் இடதுசாரி ஐக்கிய முன்னணி என்று குறிப்பிடமுடியும். இடதுசாரிக் கட்சிகளிடையே ஏற்பட்டிருக்கும் குறைந்த பட்சத் திட்டத்தின் ஒற்றுமையை, இடதுசாரி ஐக்கிய முன்னணி என்று நினைப்பது வெறும் பகற் கனவு. உண்மையில் நாங்கள் ஏற்படுத்தாததொன்றை ஏற்படுத்தி விட்டோம் என்று கூறி மக்களை ஏமாற்றக் கூடாது.

## செயல்மூலம் ஐயம்

உடன்பாடு ஏற்படுவதற்காக மூன்று இடதுசாரிக் கட்சிகளும் கையாண்ட முறைகள் நம்பிக்கை ஊட்டுவனவாக இல்லை. சித்தாந்த ரீதியில், பொருளாதார ரீதியில் அல்லது அரசியல் ரீதியில் போராட்டத்தின் இறுதியில் ஏற்படும் ஐக்கியந்தான் பலனுள்ளது என்பது மார்க்ஸிஸம் ஏற்றுக் கொண்ட உண்மை. இரகசியக் கூட்டங்களில் ஏற்படும் சந்

என்று சிலர் வாதிடுகின்றனர். நாங்கள் இவ் வாதத்தை ஏற்கவில்லை. நாம் விவாதிக்க வேண்டுமென்று விரும்பியது, எந்த இடதுசாரித் தலைவர் பிரதமராவதென்பது பற்றி அல்ல, மாறாக மிக முக்கியமானதான, தொழிலாள வர்க்கத்தை சோஷலிஸப் பாதையில் எடுத்துச்செல்லக் கூடிய சரியான பாதை எது என்பது பற்றியே. பூரணமான, சுதந்திரமான, நேர்மையான, வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் நடத்தாததன் பிரதிபலன், வெடிப்புகள் ஏற்கெனவே தோன்றத் தொடங்கி விட்டன. அன்று பேராதனை சர்வகலாசாலையில் சொற்பொழிவாற்றிய போது திரு. பிலிப் குணவர்த்தன, இடதுசாரி இயக்கத்தில் புரட்சிகரக் கொள்கைகளைக் கடைப் பிடிக்கும் எங்களைத் தாக்கியது மட்டுமல்லாது, தனது இடதுசாரி ஐக்கிய முன்னணியின் உத்தியோக பூர்வமான பங்காளிகளை, கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளை காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணிபற்றிய, இவ்விரு கட்சிகளின் கண்ணோட்டத்தையும் தாக்கிப் பேசினார். சீனத் தலைவர்களை பீக்கிங் யுத்த தளபதிகள் என்றும் தாக்கினார். சீன—இந்திய எல்லைப் பிரச்சினையில் சீனாவின் கொள்கையை உத்தியோக பூர்வமாக ஆதரித்த சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்கள் மௌனம் சாதித்தனர். இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முன்னணித் தலைவர்கள் மத்தியில் கூட, கடந்த சம்பவங்கள் பற்றியோ, இன்றைய நிலை பற்றியோ தெளிவான கண்ணோட்டமோ, கொள்கையோ இல்லை என்பதைத் தான்

வேண்டும். ஐக்கியம் ஏற்படக் கொஞ்சம் சுணங்கினாலும், அத்திவாரம் உறுதியாகக் கட்டப்பட்டு விடும். இன்றைய ஐக்கிய முன்னணி தோன்றிய விதம், முதலில் ஓட்டைப் போட்டுவிட்டுப் பின்பு வீட்டைக் கட்டுவதுபோலாகும்.

கடந்த இருபது வருடங்களாகத் தீவிரமாக வேறுபட்டிருந்த மூன்று இடதுசாரிக் கட்சிகள் ஒரு முன்னணியில் ஒன்று சேரும் பொழுது எந்த அடிப்படையில் இவர்கள் ஒன்றுசேர்ந்தார்கள் என்று அறிய மக்களுக்கு உரிமையுண்டு. உதாரணமாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் தான் சோஷலிஸம் நிர்மாணிக்க முடியும் என்று கம்யூனிஸ்ட் கட்சி நம்பியது. ஆனால் சமசமாஜ, எம். ஈ, பி. கட்சிகள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைய ஐக்கியத்தின் அடிப்படை என்ன? கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் தான் வைத்திருந்த நம்பிக்கையைக் கைவிட்டு விட்டதா? அல்லது சமசமாஜக் கட்சியும் எம்.இ.பி.யும் அதனை ஏற்றுக் கொண்டு விட்டனவா? இது எங்களுக்குத் தெரியாது. இது தான் இங்குள்ள கோளாறு.

ஐக்கியத்தின்அடிப்படையை வெளிப்படையாக விவாதிக்காத போதும், மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஒரே ஒரு பிரகடனம், எந்த முற்போக்கு வாதியும் ஏற்றுக் கொள்ளக் கூடிய, ஏகாதிபத்திய விரோத நிலப் பிரபுத்துவ விரோத வேலைத் திட்டமாக அமையும் போதும், இத் திட்டத்தை நிறைவேற்றும்மார்க்கங்களும், தந்திரோபாயங்களும் என்ன என்பது பற்றி மௌனம் சாதிக்கும் போதும், இந்த

**நா. சண்முகதாசன்**

தேசிய அமைப்பாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

இன்றைய இடதுசாரி ஐக்கிய முன்னணித்தலைமை புரட்சிகரக் கொள்கைகளைக் கைவிடுவதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. எமது வேற்றுமைகள் இடதுசாரி ஐக்கிய முன்னணி தோன்றுவதன் அவசியத்தைப் பற்றி அல்ல. இந்த விஷயத்தில் என்னைப் பொறுத்தமட்டில் இடதுசாரி ஐக்கியம் வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சிக்குள் முதல் முதல் கோஷமிட்டவர்களில் நான் ஒருவன். 1962ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடதுசாரி ஐக்கியம் வேண்டுமென்றும் அந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைமையில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கு வாதிகள் உட்பட்ட ஓர் பரந்த முற்போக்குவாதிகளின் முன்னணி வேண்டுமென்றும்ஒருபிரேரணைகொண்டுவந்தேன். இப்பிரேரணைஇன்றைய திரிபுவாத தலைவர்களால் அன்று தோற்கடிக்கப்பட்டது. இந்தத் தலைவர்கள் எம்மை இடதுசாரி ஐக்கியத்தின் விரோதிகள் என்று சொல்வது வேடிக்கையானது.

நாம் எதிர்ப்பது, பாராளுமன்ற முறையில் மட்டும் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று நம்பி, வெகுஜன இயக்கங்களுக்குப் புறமுதுகு காட்டும், ஐக்கிய முன்னணியின் இன்றைய கொள்கையாகும். இன்றும் நாம் இடதுசாரி ஐக்கிய முன்னணியைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். நீங்கள் தேர்தல் முன்னணியாகச் சீரழிவதைத் தடைசெய்யுங்கள்' முப்பது வருடங்களுக்குமுன் இடதுசாரி இயக்கத்தில் முதல்வர்களைத், தலைவர்களை ஆகர்சித்த சரியான புரட்சிகரக் கொள்கைகளைக் கடைப்பிடித்து சகல புரட்சிகர இயக்கங்களுக்கும் தலைமைதாங்கும் முறையில் இடதுசாரி ஐக்கிய முன்னணியை ஓர் போராட்ட அணியாக மாற்றுங்கள். இதை நீங்கள் செய்தால் உங்களின் உறுதுணையான, ஆதரவாளர்களாக நாம் அணி திரள்வோம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.